# 5

# நஜீஸின் வகைகள்

ஒரு முஸ்லிம் இபாதத்களை நிறைவேற்றுவதற்குச் சுத்தமாக இருப்பது அவசியமாகும். அவன் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு நஜீஸ்களிலிருந்து (அசுத்தங்களிலிருந்து) தவிர்ந்து வாழ்வது அவசியமாகும். இவ்வாறான அசுத்தங்கள், அவற்றின் வகைகள், அவற்றிலிருந்து சுத்தமாகும் முறைகள் பற்றி இஸ்லாம் எமக்குத் தெளிவாகக் கூறியுள்ளது. அந்நஜீஸ்கள் பற்றி அறிந்துகொள்வோம்.

**நஜீஸின் வகைகள்**

சுத்தம் செய்யும் முறைகளை வைத்து நஜீஸ் மூன்றாகப் பிரித்து நோக்கப்படுகிறது.

1. சாதாரண நஜீஸ்
2. இலகுவான நஜீஸ்
3. கடுமையான நஜீஸ்

### 1. சாதாரண நஜீஸுக்கான சில உதாரணங்கள்

- மலம்
- சிறுநீர்
- இரத்தம்
- வாந்தி
- வதி
- மதி
- ஆழ்ந்த தூக்கத்தின்போது வாயிலிருந்து வடியும் வீணீர்
- சாப்பிட அனுமதிக்கப்படாத பிராணிகளின் பால்
- பிராணிகளின் இறந்த உடல்
- உயிருள்ள பிராணிகளிலிருந்து பிரிந்த பகுதிகள்

### சுத்தம் செய்யும் முறை

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நஜீஸ் உடலிலோ, ஆடையிலோ படிந்துவிட்டால் குறித்த நஜீஸை முதலில் அவ்விடத்திலிருந்து நீக்கிவிட வேண்டும். பின்னர் நஜீஸின் சுவை, நிறம், மணம் ஆகிய மூன்றும் நீங்கும் வரை கழுவ வேண்டும். நீரால் மாத்திரம் நஜீஸை நீக்க முடியாதபோது சவர்க்காரம், சலவைத்தூள் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். சுத்தம் செய்தபின்னரும் குறித்த நஜீஸின் நிறம், மணம் ஆகிய இரண்டுமோ அல்லது சுவை மட்டுமோ எஞ்சியிருந்தாலும் அது சுத்தமாகக் கருதப்படமாட்டாது.

**விதிவிலக்குகள்**

- தானாகவே இறந்த மீன், வெட்டுக்கிளி

  (இவை சுத்தமானவை. சாப்பிட அனுமதிக்கப்பட்டுள்ளன)
- இரத்தம் சிந்தாத பிராணிகளான எறும்பு, தேனீ போன்றன.
- சாப்பிட அனுமதிக்கப்பட்ட இறந்த பிராணிகளின் எலும்பு, கொம்பு, நகம், உரோமம், சிறகு போன்றவை.
- மிகச் சிறிய அளவில் உடையில், உடம்பில் படும் இரத்தம்
- தாய்ப்பால்

## 2. இலகுவான நஜீஸ்

தாய்ப்பாலை மட்டும் உணவாகக் உட்கொள்ளும் இரண்டு வயதுக்கு உட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர்.

### சுத்தம் செய்யும் முறை

இத்தகைய நஜீஸை சுத்தம் செய்யும்போது குறித்த நஜீஸைப் பிழிந்து அகற்றிய பின்னர், அவ்விடத்தில் சுத்தமான நீரைப் போதியளவு தெளித்து விடுவது போதுமானது.

## 3. கடுமையான நஜீஸ்

நாய், பன்றி என்பவற்றின் மலம், சலம், உமிழ்நீர், வியர்வை, இரத்தம் போன்ற அனைத்தும் இதில் அடங்கும்.

### சுத்தம் செய்யும் முறை

இந்நஜீஸை சுத்தம் செய்யும்போது முன்னர் கூறப்பட்ட முறைகளைக்

கடைப்பிடிப்பதுடன் இவற்றுக்கு மேலதிகமாக ஏழு தடவைகள் நீரூற்றிக் கழுவுதல் வேண்டும். முதல் தடவையிலோ அல்லது இடையிலோ மண் கரைசலை உபயோகித்துக் கழுவுதல் வேண்டும். கடுமையான நஜீஸ் படிந்துள்ள இடத்தில் நஜீஸின் மூவகைப் பண்புகளும் புலப்படாவிட்டாலும் கூட ஏழு தடவைகள் கழுவுதல் வேண்டும்.

பரந்த (கடல், குளம் போன்ற) நீர் நிலைகளில் சுத்தம் செய்யும்போதும், ஓடும் நீரில் சுத்தம் செய்யும்போதும் நீரைச் சிறிது கலக்கி அந்நீரில் அமிழ்த்திய பின் ஆறு தடவைகள் நீரினுள் அலசியெடுத்தல் போதுமானது.

பொதுவாக நஜீஸானவற்றைப் பயன்படுத்த முடியாது. ஆயினும் ஒருசில நஜிஸ்களைச் சுத்தம் செய்து பயன்படுத்த முடியும். அவ்வாறானவற்றுக்கு உதாரணமாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

***1. விலங்குகளின் தோல்*** நாய், பன்றி தவிர்ந்த ஏனைய விலங்குகளின் தோல்களைப் பொறுத்த வரை அவற்றை நன்கு பதனிடுவதன் மூலம் உணவு தவிர்ந்த ஏனைய பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியும்.

***2. மதுபானம் (கள்ளு)*** இயற்கையாக எடுக்கப்படுகின்ற வேறு கலவைகள் சேர்க்கப்படாத கள்ளு, தானாகவே வினாக்கிரியாக மாறிவிட்டால் அதனை உணவுத் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

***3. நஜீஸ் விழுந்த உறைந்த பால்*** பால் உறைந்து நெய், பட்டர், சீஸ் போன்ற கட்டியான நிலையில் இருந்து அதில் நஜிஸ் விழுந்தால் அந்நஜிஸ் படிந்த பகுதியை எடுத்துவிட்டு எஞ்சியதைப் பயன்படுத்த முடியும்.

**பயிற்சி**

1. நஜீஸ் என்ற பதத்தின் பொருளைத் தருக.
2. கடுமையான நஜீஸில் அடங்குபவை எவை?
3. இலகுவான நஜீஸை எவ்வாறு சுத்தம் செய்ய வேண்டும்?
4. நெய்யில் நஜீஸ் விழுந்தால் அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?
5. சாதாரண நஜீஸ்கள் நான்கைத் தருக.